2003 நவம்பர் 5]

எண்ணிக்கையில் அதற்கு வாங்கமுடியாத சூழ்நிலை இருந்தது. இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்பு அந்த நிதிநிலைமையை சீரமைப்பதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாக இப்போது ஓரளவு நிதிநிலைமை சீர் செய்யப்பட்டு இருக்கிறதே தவிர, முழுமையாக இன்னும் நிதிநிலைமை சீர் செய்யப்படவில்லை. இருந்தபோதிலும்கூட பல்வேறு மாற்று ஏற்பாடுகளைச் செய்து, நிதி ஆதாரங்களைப் பெற்று, இன்றைக்கு அரசு விரைவுப் போக்குவரத்திற்கும் தேவையான அளவுக்கு புதிய பேருந்துகள் வாங்குவதற்காக அரசு திட்டம் தீட்டியுள்ளது என்பதையும், நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

43—

புவி தொழில்நுட்ப ஆய்வு

***28805—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவைக் கண்டறிய புவி தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்படுகிறதா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவைக் கண்டறிய புவி இயல் துறையைச் சார்ந்த புவி தொழில்நுட்ப மையம் மூலம் புவி தொழில் நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுகின்றது. இப்படி ஏற்படுகின்ற நிலச்சரிவு போக்குவரத்தை பாதிக்கின்றது. ஊட்டிக்குச்

செல்கின்ற சுற்றுலாப் பயணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, நிலச்சரிவு ஏற்படுகின்ற பகுதிகளை அரசு நடத்தி இருக்கிற ஆய்வின் அடிப்படையில் முன்கூட்டியேக் கண்டறிந்து, அந்த நிலச்சரிவைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு ஏற்படுகின்ற பகுதிகளில் புவியியல் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஏற்கெனவே ஆய்வு நடத்தி வந்துகொண்டு இருக்கின்றனர். தொடர்ந்து ஆய்வு நடைபெற்று வருகிறது. இந்த ஆய்வின் அடிப்படையில் எந்தெந்த இடங்களில், எந்தெந்தப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படுகின்றதோ அந்தந்த இடங்களில் எல்லாம் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுவது இல்லை. மேலும் எந்த இடங்களில் நிலச்சரிவு ஏற்படுமோ, அந்த இடங்களை முன்கூட்டியே ஆய்ந்து, அந்தந்தப் பகுதி மக்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில், துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள். தொடர்ந்து அதற்கான முயற்சிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் எத்தனை இடங்களில் ஆய்வு செய்யப்பட்டு உள்ளது? அந்த ஆய்வு செய்யப்பட்ட இடங்களைப் பற்றி பொதுமக்களுக்குத் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு 152 இடங்களிலும், 2001-2002 ஆம் ஆண்டு 298 இடங்களிலும், 2002-2003 ஆம் ஆண்டு 446 இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தந்த இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, பிறகு அந்தப் பகுதிகளில் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படுவதை நாம் எல்லாம் அறிவோம். சில ஆண்டுகளுக்கு முன்பாக குந்தா தாலுகா, கீழ்குந்தா

2003 நவம்பர் 5]

பேரூராட்சிக்குட்பட்ட கெத்தை என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிர். இழந்தார்கள். டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் போன்ற மாதங்களில், வெள்ளம் வராத சமயத்தில், மழை இல்லாத சமயத்தில், புவியியல் தொழில்நுட்ப ஆய்வாளர்கள் எல்லாம் சென்று எந்தெந்த இடங்களில் வெள்ளம் வருகிறதோ, அந்த இடங்களிலே தடுப்புச் சுவர்கள் கட்டி, பெரும் வெள்ளமாக வருவதைப் பிரித்துக்கொடுக்க வேண்டும். மாண்புமிகு தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். அவ்வாறு பிரித்துக் கொடுத்தால், 4, 5 இடங்களாக தண்ணீர் வரும்போது பெரும் வெள்ளத்தைத் தவிர்க்கலாம். அந்த முறையைக் கடைபிடித்தால் உயிர்ச்சேதம் கண்டிப்பாக ஏற்படாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கமாகச் சொன்னாலும்கூட, இத்துறை அதிகாரிகளுக்கு ஒரே வழியாக வரும் அம்மாதிரி வெள்ளத்தைப் பிரித்துக் கொடுத்தால், சிறு சிறு வெள்ளப் பகுதியாக பிரிந்து வரும்போது உயிர்களுக்கு எந்தவிதமான கெடுதியும் வராது என்பதைத் தெரிவிக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஆய்வுத் துறையினருக்கு அறிவுரை தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Soil Conservation Department மூலமாக அந்தப் பகுதிகளில் இப்போது தடுப்புச் சுவர் கட்டப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை ஏற்று அவ்வாறே செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், உங்கள் பகுதியில் மலையே இல்லையே, எங்கே நிலச்சரிவு வரப்போகிறது?

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைச் சரிவைக் கண்டுபிடிப்பதற்கான வகையிலே புவியியல் துறையின் மூலமாக ஆய்வுகள் நிரம்ப இடத்தில் மேற்கொள்ளப் பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, நில நடுக்கம் ஏற்படுத்துவதற்குரிய அறிகுறிகள் இருப்பதாக சில சந்தர்ப்பங்களிலே சொல்லப்பட்டதே! அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறதா? அதை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நில நடுக்கத்திற்குத் தனிக் கேள்விப் போடுங்கள்.

வினா எண் *44*, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

44—

வணிக வரி வசூல்

***10055—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரி செலுத்துவோரிடமிருந்து பெறப்பட வேண்டிய வரியை வசூலிக்க அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வங்கிக் கணக்கிலிருக்கும் வணிகரின் தொகையை பற்றுகை செய்தல், கொள்முதல் செய்தவர்களுக்கு தாக்கீது அனுப்பி அவர் செலுத்த வேண்டிய தொகையினை அரசுக் கணக்கில் செலுத்தக் கோருதல், வருவாய் மீட்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை மற்றும் மத்திய வருவாய் மீட்பு சட்டத்தின்படி மற்ற மாநில வட்டாட்சியருடன் தொடர்புகொண்டு வரி நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கக் கோருதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நிலுவையாக இருந்த வரிவசூல் தொகையை வசூலிக்க சமாதானத் திட்டம், விற்பனை வரித் தீர்வாணையம் (Settlement Commission), சிறப்புக் குழு போன்றவை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமாதானத் திட்டத்தின் மூலமாக சுமார் ரூ.*10.34* கோடி வசூல் செய்யப்பட்டது என்று அறிகிறேன். இந்த